Life of Christ
Tamil



# கிறிஸ்துவின் ஜீவியத்தில் முக்கியமானவை

## 2 இயேசு சிறந்த ஆசிரியர்

- ஆயத்தப்படுத்தப்பட்ட வருஷங்கள்
- தேவனுடைய ஊழியத்துக்காக அபிஷேகிக்கப்பட்டமை
- இயேசு ஓர் கிராமத்து ஸ்திரிக்குக் கற்பித்தமை
- இயேசு ஓர் பணக்காரனுக்குக் கற்பித்தமை

### நீர் செய்ய வேண்டியது

3. ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தை மனப் பாடம் செய்யவும்.

4. '' அபிஷேகிக்கப்பட்டவர் '' என்னும் கருத்தைக் கொண்ட பெயர்களைத் தருக.

5. இயேசு நோயாளிகளுக்கு சுகத்தைக் கொடுக்கக் கூடியதாக இருந்ததற்குக் காரணம்.

   (a) அவருக்கு அனேக வழிவகைகள் தெரிந்திருந்தபடியால்

   (b) அவர் மருந்துகளைப்பற்றி கற்றறிந்த படியினால்.

   (c) தேவ ஆவியானவர் அவரை அபிஷே கித்திருந்த படியால்.

## இயேசு ஓர் கிராம ஸ்திரிக்குக் கற்பித்தமை

*சமாரியாவிற்கூடாக ஓர் பிரயணாம்.*



இயேசு தமக்கு உதவியாளர்களாக பன்னிரண்டு ஆண்களைத் தேர்ந் தெடுத்தார். அவர்களை சீடர்கள் அல்லது மாணவர்கள் என நாம் அழைப்போம். அவர்களில் இரு வராகிய மத்தேயுவும், யோவா னும் இயேசுவைப்பற்றி எழுதியி ருக்கின்றனர். இயேசு வின் சமாரியாவிற்கூடான பிரயாணத் தைப்பற்றி யோவான் கூறுகின் ருன்.

கலிலேயாவிலிருந்து எருசலேமுக்குச் செல்ல மிகக்குறுகிய வழி சமாரியாவிற்கூடாக இருந்தாலும், பிரயாணிகள் சமாரியரை வெறுத்ததினல் தூர- மான பாதையிற் பிரயாணம் செய்தனர். சமாரியர் வேறு சந்ததியாரும், வித்தியாசமான பழக்க வழக் கங்களை உடையவர்களாயும் இருந்தபடியால் சகல ரும் அவர்களை வெறுத்தனர். ஆனல் இயேசுவோ சமாரியரை அவ்விதம் கருதவில்லை. அவர் எல்லோ ரையும் நேசித்தார். தேவன் சகல ஜாதியாருக்கும் இரட்சிப்பை அளிக்க வாக்குக் கொடுத்திருந்தபடி யால் இயேசு சமாரியருக்கும் தேவ இரட்சிப்பை அளிக்கும் படி குறுகிய பாதையைத் தெரிந்து கொண் டார்.

### நீர் செய்ய வேண்டிது

6. இயேசு சாமரியரோடு சிநேகிதமாய் இருந்தாரா

(a) இல்லை, ஏனெனில் அவர்கள் வேறு இனத்தையும் சமயத்தையும் சேர்ந்தவர்களாயிருந்தனர்.

(b) ஆம், இயேசு எல்லோரையும் நேசித்தார்.

(c) இல்லை, அவர்கள் மிகவும் பாவிகளாயிருந்தனர்.

## தாகத்தை திருப்தியாக்கும் தண்ணீர்.

சமாரியாவிலுள்ள சீக்கார் கிராமத்திலே தமது சீஷர்கள் ஆகாரம் வாங்கச் சென்றபின்பு இயேசு ஓர் கிணற்றண்டையில் உட்கார்ந்தார். ஓர் சமாரிய ஸ்திரி தண்ணீர் அள்ளும்படி வந்த வேளையில் இயேசு அவளிடத்தில் தாகத்திற்குத் தண்ணீர் கேட்டார். இயேசு தன்னேடு பேசியதைக் கண்டு அவள் ஆச்சரியப்பட்டாள்.

இயேசு அவளை நோக்கி ''தேவன் கொடுக்கக்கூடியதையும், உன்னேடு பேசுவது இன்னர் என்பதையும் நீ அறிந்திருந்தால், நீர் அவரிடத்தில் தாகத்திற்குக் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவ தண்ணீரைக் கொடுத்திருப்பார்,'' என்றார். அவளோ அவரை நோக்கி, ''உம்மிடத்தில் தண்ணீர் அள்ளுவதற்கு பாத்திரம் இல்லையே, கிணறும் ஆழமாயிருக்கிறதே, எங்கேயிருந்து உமக்கு ஜீவதண்ணீர் உண்டாகும்?'' .......... ........இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக ''இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது. நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றயிருக்கும் என்றார்.

யோவான் 4:10-14.

எமது சரீரத்திற்குத் தண்ணீர் தேவையான வேளையில் நாம் தாகம் அடைகிறேம். எமது சரீரத்திற்குத் தண்ணீர் தேவையானது போன்று, எமது ஆவிக்கும் தேவை இருக்கிறது. இத்தேவை சந்திக்கப்படும் வரை நாம் திருப்தியற்றவர்களும், ஆவிக்குரிய தாகமுள்ளவர்களாயுமிருக்கிறேம்.

அந்த சமாரிய ஸ்திரி அன்பிலே திருப்தியைப் பெற முயற்சித்திருந்தாள். அவள் ஐந்து முறை திருமணம் செய்து தன்னுடைய புருஷன் அல்லாத ஒருவனேடு ஜீவித்துக் கொண்டிருந்தாள். இயேசு அவளைக் கண்டதும் அவளது நிலையை அறிந்தார். அவளது பாவங்கள் மன்னிக்கப்படும்வரை அவள் மகிழ்ச்சி காணமாட்டாள் என்பதை அவர் அறிந்

திருந்தார். இயேசு அவளுடைய பாவங்களைக் குறித்து அவளுக்குணர்த்தினார். அவள் தனது நிலையை ஒப்புக் கொண்டாள். அவள், இயேசு தேவனிடத்திலிருந்து வந்தவர் என்றும், ஓர் தீர்க்க தரிசி என்றும் நம்பினாள். இயேசுவால் தனக்கு உதவி செய்ய முடியும் என்று அவள் நம்பினாள். அவள் அவரிடத்தில் தேவனை எப்படித் தொழுதுகொள்ள வேண்டும் என்று கேட்டாள். அதற்கு இயேசு கூறிய பதிலை மனப்பாடம் செய்யவும்

> ''தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்.'' யோவான் 4:24.

இயேசு தாம் மேசியா என்பதை அவளுக்கு வெளிப்படுத்தினார். இரட்சகரை சந்தித்ததைக் குறித்து அவள் மிகவும் மகிழ்ச்சியடைந்தாள். அந் நேரததிலிருந்து அவளது ஜீவியம் மாறியது. அவள் ஓடிச் சென்று தனது சினேகிதர்களுக்கும் இயேசுவைக் குறித்துச் சொன்னாள். அவர்களுக்கும் இந்த ஜீவ தண்ணீர் தேவையாக இருந்தது.

> ''அப்பொழுது அவருடைய உபதேசத்தினிமித்தம் இன்னும் அநேகம் பேர் விசுவாசித்து, அந்த ஸ்திரியை நோக்கி: ''உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம்'' என்றார்கள்.
>
> யோவான் 4:41,42.

ஜனங்கள் சந்தோஷத்தை, பொருள்கள், அன்பு பாலுறவு, மருந்துவகைகள், மதுபானம், கல்வி, அதிகாரம், சமயம், நற்கிரியை, சந்நியாசம் போன்றவற்றால் பெற முயல்கின்றனர். இவை ஒன்றும் ஒரு பொழுதும் பூரண திருப்தியைக் கொடுக்கமாட்டாது இயேசுவினாலும், அவர் கொடுக்கும் இரட்சிப்பினாலும் மாத்திரமே எமது தாகம் தீர்க்கப்படமுடியும்.

ஜெபம்.

என்னை உருவாக்கிய தேவனே, எனது ஆவிக்குரிய தாகம் இன்னதென்பதை நீர் அறிவீர். தயவாய் எனது பாவங்களை மன்னித்து, ஜீவதண்ணீரால் என்னைத் திருப்தியாக்கும். உம்மை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ள எனக்குக் கற்பியும். நானும் இயேசுவை சந்தித்து அவரே இவ்வுலகின் இரட்சகர் என்பதை அறிந்து கொள்ள எனக்கு உதவிசெய்யும்.

### நீர் செய்ய வேண்டியது

7. இயேசுவினிடத்தில் நீர் பரிபூரண திருப்தியை அடைந்திருக்கிறீரா?...............
நீர் அதைப்பெறவிரும்புகிறீரா?.........

மேலே உள்ள ஜெபத்தை ஐந்து தடவை வாசிக்கவும்.

## இயேசு ஓர் பணக்காரனுக்குக் கற்பித்தமை

ஓர் தடவை ஓர் பணக்காரன் இயேசுவினிடத்தில் வந்து, ''நல்ல போதகரே, நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்'' என்று கேட்டான். பரலோகத்திலுள்ள அழகான வீட்டிற் பிரவேசிப்பதற்கு அவன் தன்னால் முடிந்த வரை நல்லவனாக ஜீவிக்க முயற்சித்தான். அவன் விபசாரம் செய்யாதவனும், கொலை செய்யாதவனுமாய் இருந்தான். அவன் தன் பெற்றோரை கனம் செய்தவனும், களவெடுக்காதவனும், பொய் சொல்லாதவனும், ஏமாற்றாதவனுமாய் இருந்தான்.

இவ்வளவு நல்லவனாயிருந்தும் அவன் குறைவுள்ளவனாயிருந்தான். யாருமே பரலோகத்தில் பிரவேசிக்கும்படி சுயமாய் நல்லவனாய் இருக்க முடியாது. அவனிடத்தில் காணப்பட்ட பாவம் ''சுயநலம்'' ஆகும். அவன் மற்றோரைக் குறித்து கவலைப்படாமல் சுகபோகப் பிரியனாயிருந்தான். அவன் தேவனைப் பார்க்கிலும் பணத்தை அதிகமாய் நேசித்தான். சமாரிய ஸ்திரிக்கு எப்படி இயேசுவின் இரட்சிப்புத் தேவைப்பட்டதோ அதேபோன்று அவனுக்கும் இரட்சிப்பு தேவையாய் இருந்தது. உண்மையான சந்தோஷத்தையும், நித்திய ஜீவனையும் அடைவதற்கு, நாம் தேவனுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.



இயேசு அவனைப்பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்து உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு; நீ போய், உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று, தரித்திரருக்குக் கொடு; அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றி வா'' என்றார். மாற்கு 10:21.

இயேசு அவன் விரும்பிய நித்திய ஜீவனை அவனுக்குக் கொடுக்க விரும்பினார். ஆனால் அந்த மனுஷன் இவ்வுலக செல்வத்தை பரலோக செல்வத்தைவிட அதிகமாய் நேசித்தபடியினால் மனம் சோர்ந்து திரும்பினான்.

### நீர் செய்ய வேண்டியது

8. பணக்காரன் சரியானததைத் தெரிவு செய்து கொண்டானென நீர் கருதுகிறீரா ?................................

9. நல்லவனாயிருக்க முயற்சிப்பதன் மூலம் நீர் பரலோகத்திற்குச் செல்ல முடியுமா?
.................................

## வாழ்த்துக்கள்

இப்பாடத்தொகுதியின் மூன்றிலொரு பகுதிக்குள் நீர் இப்பொழுது வந்திருக்கிறீர். கீழே உள்ள விலாசத்திற்கு இப்பகுதியை அனுப்பிவைக்கவும். இதை நாம் புள்ளியிட்டு, இப்பாடத்தின் மூன்றும் பகுதியுடன் உமக்கு அனுப்பி வைப்போம்.

## குறிப்புகளும் ஜெப வேண்டுகோள்களும்.

உமக்கு ஏதாவது ஆவிக்குரிய தேவையோ, பிரச்சனையோ இருக்குமாகில் உமது ஆசிரியர் அதற்காக ஜெபிக்க விரும்புவார்.

........................................................................

........................................................................

........................................................................

உமது பெயர் ..........................................................

விலாசம் ...............................................................

...............................................................

வயது ...............................................................

சமயம் ...............................................................

ICI Nearest Centre

ICI UNIVERSITY

1ST FLOOR, 1/62/14 RAVI COLONY, ST. THOMAS MOUNT, CHENNAI - 600016

PHONE : +91-44-4351 9774

Email : iciuniversitymdrs@gmail.com